இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 126 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 01 – செவ்வாய்க்கிழமை 16 டிசம்பர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 126 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 01 - Tuesday 16 December 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (14.12.2025) திருவண்ணாமலை, கலைஞர் திடலில் நடைபெற்ற, திமுக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், கழகப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் – ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மற்றும் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் தரணிவேந்தன் எம்.சி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் – இந்நாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், ஜோயல், ரகுபதி, இளையராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ், சீனிவாசன், ராஜா, ஆனந்த குமார், கழக வடக்கு மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், வாரியத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

## வரலாறு படைக்க மக்களோடு மக்களாக இருக்க வேண்டும்!

# நமது மிஷன் (Mission) 'திராவிட மாடல் 2.0' - நினைவில் கொள்வீர்!

### திருவண்ணாமலையில் நடைபெற்ற இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**திருவண்ணாமலை, டிச.16 –**

**திருவண்ணாமலையில் நேற்று முன்தினம் (14.12.2025) மாலை நடைபெற்ற கழக இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு உரையில், "வரலாறு படைக்க கழக இளைஞர் அணியினர் மக்களோடு மக்களாக இருக்க வேண்டும்" எனவும் – "நமது 'மிஷன்' திராவிட மாடல் 2.0 – என்பதை இளைஞர் அணியினர் நினைவில் கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.**

**இம்மாபெரும் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

முதலில் உங்களைப் பற்றிச் சொல்கிறேன். மாஸாக - கெத்தாக இங்கு வந்திருக்கும் திரவிடியன் ஸ்டாக்ஸ் எல்லோருக்கும் என்னுடைய முதல் வணக்கம்!

**அமைச்சர் வேலு அவர்களிடம் ஒரு வேலையைச் சொல்லிவிட்டால், அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி இந்தக் கூட்டத்தைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய வேலு அவர்களுக்கு என்னதான் தம்பி உதயநிதி நன்றி சொல்லியிருந்தாலும், தலைமைக் கழகத்தின் சார்பில், தலைவர் என்ற முறையில் நானும், நன்றி கூற விரும்புகிறேன்.**

### 50 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லும் எனது நினைவுகள்!

எதிரில் இருக்கும் உங்களைப் பார்க்கும்போது, ஒரு ஐம்பது ஆண்டுகள் டைம்-டிராவல் செய்து பின்னால் சென்றது போன்று, எனக்கு இருக்கிறது! உங்களைப் போன்ற இளைஞனாக - கிராமம் கிராமமாக தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, இந்த இளைஞரணியை வளர்த்தெடுத்த ஞாபகங்கள் எல்லாம் வருகிறது! எத்தனை ஞாபகங்கள்? இரவு பகல் பார்க்காமல், தூக்கம் இல்லாமல், கிராமங்கள்தோறும் கொடி ஏற்றம், திண்ணைப் பிரச்சாரம், நாடகம், பொதுக் கூட்டம் எனக் கழக நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறோம். அப்படி உழைத்து, வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகம், 75 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறோம். அப்படிப்பட்ட கழகத்திற்கு, புது இரத்தமாக வந்திருக்கும் உங்களைப் பார்க்கும்போது - புது மகிழ்ச்சியும், நம்பிக்கையும் பிறக்கிறது! அதுமட்டுமல்ல, உங்களுடைய எனர்ஜி எனக்கும் 'டிரான்ஸ்பர்' ஆகியிருக்கிறது!

இந்த மாபெரும் இயக்கத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய போது, அவருக்கு வயது 40, தலைவர் கலைஞருக்கு 25 வயதுதான். பேராசிரியர், நாவலர் என்று பலரும் அவர்களின் இருபதுகளில்தான் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் எப்படி ஃபயராக இருந்தார்கள் என்பதற்கு, ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன்...

### கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்!

1941-இல் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார். அதன் முதலாம் ஆண்டு நிறைவுக்கு, புரட்சிக்கவிஞர் - பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடமிருந்து, ஒரு வாழ்த்துப்பா வந்தது. அந்த வாழ்த்துப்பாவில் புரட்சிக் கவிஞர் எழுதிய வரிகள்தான் "கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக்கூட்டம்! கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை!" இந்த வரிகளைக் கேட்கும்போதே, அந்த இளைஞர்கள் எப்படி ஃபயராக இருந்திருப்பார்கள் என்று உங்களுக்குப் புரியும்! அந்த ஃபயர்பிராண்ட்தான், நம்முடைய தி.மு.க.!

### மக்களுக்குள் மாற்றத்தை சிந்தனையாக விதைத்தோம்!

எது எதெல்லாம் இந்த தமிழ்ச்சமுதாயத்தைப் பின்னுக்கு இழுக்குமோ - எது எதெல்லாம் தமிழ்நாட்டை இருட்டிற்குள் தள்ளுமோ அவை எல்லாவற்றையும் எதிர்த்து, தோற்கடித்து, புது வரலாறு படைத்தோம்! சும்மா எடுத்தோம் - கவிழ்த்தோம் என்று இங்கு எதையும் செய்துவிடவில்லை. தெருத்தெருவாக - வீடு வீடாகச் சென்று பேசி, டீக்கடையையும் - சலூனையுமே, அரசியல் மேடைகளாக மாற்றி, மக்களை 'எஜுகேட்' செய்தோம். உலக வரலாற்றையெல்லாம் சொல்லி, நாம் ஏன் இன்னும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி, மக்களுக்குள் நல்ல மாற்றத்திற்கான விதையை, சிந்தனையாக விதைத்தார்கள்!

### "திரும்பிப் பாருங்கள் தமிழ்நாட்டை!" எனச் சொல்லும் காலத்திற்கு வந்திருக்கிறோம்!

அண்ணா பேசுகிறார்... கலைஞர் பேசுகிறார்... நாவலர் பேசுகிறார்... பேராசிரியர் பேசுகிறார் என்று சொன்னால், மக்களும் குடும்பம் குடும்பமாக வந்து அவர்கள் பேசுவதைக் கேட்டார்கள்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

---

### "கொள்கையில் ஸ்ட்ராங்காக இருக்கிறார் - கழகத்திற்கு எது தேவை என்று உணர்ந்து செயல்படுகிறார் உதயநிதி!"



**இந்தப் பயணத்தில், நாங்கள் சந்திக்காத சோதனைகள் இல்லை; துன்பங்கள் இல்லை; துரோகங்கள் இல்லை; அத்தனையையும் தாண்டி, கழகத்தின் இலட்சியப் பயணத்திற்குத் துணை நின்றது நாங்கள் வளர்த்த இளைஞரணி!**

**இப்போது அந்த பணியைத் தம்பி உதயநிதியிடமும், உங்களிடமும் ஒப்படைத்திருக்கிறோம்! அவரும் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து இன்னும் பவர்ஃபுல்லாகச் செயல்படுகிறார். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இறங்கி அடிக்கிறார்! கொள்கை எதிரிகள், "உதயநிதி மோஸ்ட் டேஞ்சரஸ்" என்று புலம்புகிறார்கள்! அந்த அளவிற்குக் கொள்கையில் ஸ்ட்ராங்காக இருக்கிறார்! கழகத்திற்கு எது தேவை என்று, உணர்ந்து செயல்படுகிறார் உதயநிதி!**

**முதலில், அணியின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று இலட்சக்கணக்கான இளைஞர்களைக் கழகத்தில் சேர்த்தார். அடுத்து, அவர்களை கொள்கை ரீதியாக ஸ்ட்ராங் ஆக்க வேண்டும் என்று பாசறைக் கூட்டங்கள் நடத்தினார். அடுத்து, நம்முடைய கொள்கைகளை இன்றைக்கு இருக்கும் தலைமுறையினரும் புரிந்துகொள்ள, புது பேச்சாளர்கள் அவசியம் என்று உணர்ந்து, ஃபர்ஸ்ட் செட்டில் இருநூறு பேரை உருவாக்கியிருக்கிறார்! அவர்களின் பேச்சையெல்லாம், கழக மேடைகளில் கேட்கும்போது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது!**

**அடுத்து, இளைஞர்களான நீங்கள் இன்னும் ஷார்ப்பாக பேச ஸ்ட்ராங்காகக் களமாட, நிறைய புத்தகங்களை உருவாக்க வேண்டும் என்று, முத்தமிழறிஞர் பதிப்பகம் தொடங்கினார். சரி, இதெல்லாம் செய்துவிட்டோம் என்று சும்மா இருக்கவில்லை. இதெல்லாம் உங்களுக்கு வந்து சேர வேண்டும் என்று, அறிவுத்திருவிழா நடத்துகிறார்! பல இடங்களில் நூலகம் ஆரம்பிக்கிறார். இதுதான், ஒரு பொலிட்டிஷியனுக்கான குவாலிட்டி!**

கழகத் தலைவர்

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**

திருவண்ணாமலை, 14.12.2025